தேதி.04.12.2020

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S.No.241/2018 பி.வா.சா.3 திரு.ராஜ்குமார்

<u>பி.வா.சா. 3 நீதிமன்ற அனுமதியின் படி திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

நானும், பிரதிவாதி மகேந்திரனும் ஒரே ஊருக்காரரர். நீண்டநாட்களாக பழக்கம். வாதி பழனிச்சாமியை எனக்கு தெரியும். வாழைக்காய் வியாபாரத்திற்காக வரபோக தெரியும். தாவா பிரதிவாதி குடியிருக்கும் வீடு மீது தாக்கல் செய்துள்ளார். என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. நான் பழனிச்சாமிக்கு மகேந்திரன் எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தில் சாட்சிகையொப்பம் போடவில்லை என்றால், போட்டேன். மகேந்திரன், பழனிச்சாமியிடம் கிரயத்திற்கு சொத்தை கொடுத்து அன்றைய தினமே சுவாதீனமும் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. பழனிச்சாமி ஊரில் இல்லாத போது, மகேந்திரனும், மனைவியும், அக்கிரமாக வீட்டின் பூட்டை உடைத்து குடியேறி விட்டார்கள் என்றால் சரியல்ல, 30 வருடங்களாக மகேந்திரன் அங்கு தான் வசித்து வருகிறார். எவ்வளவு ரூபாய் அடமானத்திற்கு எழுதிக்கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. அதனால் மகேந்திரன் என் நண்பர் என்பதால் அவருக்காக வேண்டி நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

ஒ/ம்.திரு.ராஜ்குமார் DW3

ஒ/ம். P. ஈஸ்வரமூர்த்தி
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.